ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීම් හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන, වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு
Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation, Northern Province Development, Vocational Training & Skills Development and Youth Affairs

"මිලෝදා" පළමු මහළ, බ්‍රිස්ටල් වීදිය, කොළඹ 01. 'மிலோதா', 1ஆம் மாடி,பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01."Miloda" 1st Floor, Bristol Street, Colombo 01.

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No | MNPEA/PLN/PI/2019 | |
| ඔබේ අංකය / உமது இல / Your No | | |
| දිනය / திகதி / Date | 10.01.2019 | |

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்,

## பொது முதலீட்டுக்காக அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டல்கள்

அமைச்சரவை விஞ்ஞாபன இல: 18/2222/805/069க்கு 02 ஒக்டோபர் 2018ஆந் திகதி அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஆற்றுப்படுத்துகையின் படி பொது முதலீட்டு வடிவமைப்பு செயன்முறையை நெறிப்படுத்தும் நோக்கில் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சினால் சுற்றுநிருபமொன்று வெளியிடப்படும்.

அதற்கேற்ப, பொது முதலீட்டின் செயன்முறை மற்றும் செலவு வினைத்திறன் தொடர்பாக சிறந்த தெளிவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக இச்சுற்றுநிருபத்தில் புதிய கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவத்துடன் வழிகாட்டல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய திட்டமிடல் திணைக்களம் நிரல் அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு அறிமுகப்படுத்தவும் புதியதொரு கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவத்தை தயாரிப்பதற்கும் 2018 ஆம் ஆண்டில் தொடர் செயலமர்வுகளை நடத்தியது. இப்புதிய கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவத்தில் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு கருத்திட்டங்களின் பங்களிப்பினை பிரதிபலிக்கச்செய்யும் விதத்தில் கருத்திட்டங்கள் தொடர்பான ஒரு சில புதிய பிரமாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அப்படிவமானது தற்போதுள்ள கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவத்தின் மேம்பட்ட பதிப்பாக இருக்கின்றது.

இச்சுற்றுநிருபம் 01 ஜனவரி 2019ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகும். மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களம் புதிய கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவத்துக்கேற்ப கருத்திட்ட முன்மொழிவைத் தயாரிக்கும் போது நிறுவனங்கள் முகங்கொடுத்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் அடுத்த 2-3 மாதங்களில் தொடர் செயலமர்வுத் தொடர்களை ஏற்பாடு செய்யவுள்ளது. இச்செயலமர்வுகளுக்கான திகதிகள் உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

எனவே, 01 ஜனவரி 2019ஆந் திகதியிலிருந்து பொது முதலீடுகளுக்காகக் கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்குப் புதிய கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவத்தை பயன்படுத்துமாறு தங்களது அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்ட முடியுமாக இருந்தால் நன்றியுடையவனாக இருப்பேன். மேலும், கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரிப்பதற்கு இப்புதிய கருத்திட்ட சமர்ப்பிப்புப் படிவத்தை பயன்படுத்தும் போது ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் உரிய பணிப்பாளரைத் தொடர்பு கொள்ளுமாறு தங்களின் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்குத் தயவுசெய்து அறிவிக்கவும்.

இது தொடர்பான தங்களின் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றேன்.

**ஒப்பம்** / வீ. சிவஞானசோதி
செயலாளர்